DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Civil Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**<u>O.S.No. 82 of 2025</u>**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W. 2 | } | Defence |
| | } | |

| | | |
|---|---|---|
| Name of the Witness | : | திரு.சி.முனுசாமி |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 11.06.2026.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டி குறுவட்ட அளவையராக பணிபுரிந்து வருகிறேன். இந்த

நீதிமன்றத்தின் அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அதற்காக பென்னாகரம் வட்டாட்சியர் வழங்கிய அனுமதி கடிதத்தை நான் தாக்கல் செய்கிறேன். அந்த அனுமதி கடிதம் **Ex.X1** ஆகும். தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், பாப்பாரப்பட்டி உள்வட்டம், வட்டுவனஅள்ளி கிராம புல எண் 309 மற்றும் 308/5 ஆகிய நிலத்திற்கான யூ.டி.ஆருக்கு முந்தைய அ பதிவேட்டு நகலினை கேட்டு அழைப்பாணை வந்திருந்தது என்றால் சரிதான். சர்வே எண் 308/5 என்ற நிலத்திற்கான, யூ.டி.ஆருக்கு முந்தைய அ பதிவேட்டில் நிலம் உரிமையாளர் பெயராக தையல்நாயகம் பெயரில் உள்ளது. அதற்கான உண்மை நகலை நான் தற்போது தாக்கல் செய்கிறேன். அது **Ex.X2** ஆகும். சர்வே எண் 309 என்ற நிலத்திற்கான, யூ.டி.ஆருக்கு முந்தைய அ பதிவேட்டில் நிலம் உரிமையாளர் பெயராக ராமசாமி செட்டியார் பெயரில் உள்ளது. அதற்கான உண்மை நகலை நான் தற்போது தாக்கல் செய்கிறேன். அது **Ex.X3** ஆகும். (மேலும் சில ஆவணங்களை எங்கள் அலுவலகத்தில் சேகரித்து வர வேண்டியுள்ளதால் கால அவகாசம் தேவைப்படுகிறது. எனவே முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

Sd/Tmt.K.R.Jothi, B.A.,B.L.,
Additional District Judge,
Dharmapuri.